திரு. எம். ஏ. லத்திப் : தலைவரவர்களே, நடமாடும் மருத்துவ மனை ஆலங்காயத்தில் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் ஒரு வாரத்திற்கு ஒரு முறை அங்கே நடமாடும் மருத்துவ மனை நடமாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் 6 மாதத்திற்கு ஒரு முறைகூட அந்தப் பகுதியில் அது நடமாடுவது இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? அதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இருக்கிற முறைகளைத்தான் குறிப்பிலிருந்து நான் கூற முடியும். ஏற்படுகிற குறைகளை அமைச்சரவர்களுக்கு ஏற்கெனவே தெரிவித்து இருக்கவேண்டும். அமைச்சர் அறிவாரா என்று கேட்கிறபோது, அமைச்சருக்கு அறிவித்தாரா என்று எண்ணிப்பார்க்க வேண்டும்.

திரு. ஈ. எம். நடராசன் : தலைவரவர்களே, பவானி வட்டத்தில் உள்ள பர்கூர் மலைப்பகுதி . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போதுதான் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அமைச்சர் அவர்களிடத்தில் அறிவிப்பு கொடுக்காமல் எந்தத் தகவலையும் கேட்பது சரியல்ல.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, as Hosur and Denkanikottah taluks are hilly and difficult areas, may I know whether such mobile dispensaries will be started in those taluks?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Recently the Government considered that the Coimbatore and Dharmapuri districts which are largely covered by hilly terrain should have mobile medical facilities and have sanctioned two mobile units, one for the Coimbatore district and another for the Dharmapuri district. A mobile medical van has been supplied to each of these two districts என்ற குறிப்பு என்னிடத்தில் இருக்கிறது.

மணல்மேட்டிலுள்ள அரசினர் மருந்தகம்

*** 508 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதி மணல்மேட்டில் உள்ள அரசினர் மருந்தகத்தினை, மருத்துவமனையாக மாற்றி அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த மணல்மேடு அண்மையில் பேரூராட்சியாக உயர்த்தப்பட்டு இருப்பதாலும் அங்கே மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை இயங்கி, அதிலே அதிகமான தொழிலாளர்கள் பணிசெய்வதாலும், அங்கே உள்ள மருந்தகத்தை, ஒரு மருத்துவமனையாக மாற்றம் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மணல்மேட்டிலிருந்து 6 மைல் தொலைவில்தான் மாயூரம் நகராட்சி பகுதி இருக்கிறது. அங்கே பெரிய மருத்துவமனை இருக்கிறது. பஞ்சாயத்து ஒன்றியம் தீர்மானம் போட்டு அனுப்பாத இடத்தில் மருத்துவமனை அமைக்க நிதி இடம் தராது.